**கெபதிகொல்லேவ பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெபதிகொல்லேவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்து / உரிமை மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கெபதிகொல்லேவ பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள்,

நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள் மற்றும் பொருத்தமான சட்ட விதிகளிற்கிணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுடில் கணக்குகள் தயாரிக்கும் போது 2022 ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்டு இருந்த ரூபா 1,500,000 ஆன முத்திரை வருமானம் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானத்திலிருந்து அகற்றியதால் அப்பெறுமானத்தால் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானம் குறைந்திருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 169,415 மீளாய்வாண்டின் வருமானமாக விரிவான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்ததால் மீளாய்வாண்டின் நீதிமன்ற | ஏற்றுக் கொள்வதென. | சரியாக பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தண்டப்பணம் அப் பெறுமதியால் அதிகரித்திருந்தது. | | |
| (ஆ) | யகாவெவ நீர் கருத்திட்டத்தில் இருந்து 2023 திசெம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 366,190 ஆன போதும் அது ரூபா 166,526 ஆக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 3,221,920 ஆன போதும் அட்டவணை பிரகாரம் அது ரூபா 2,775,755 ஆனதில் ரூபா 446,165 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்வதென. | நேரொத்த அறிக்கைகள் அட்டவணைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | இணங்காத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| மயானம் | 56,800,000 | ஒப்படை சான்றிதழ் | ஏற்றுக் கொள்வதென. | உறுதி செய்யும் எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 8,847,011 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,444,662 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வகை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,269,000 | 863,370 | 863,370 | - | 1,136,400 | 1,054,950 | 1,054,950 | 0 |
| (ii) | வாடகை | 12,870,665 | 11,025,542 | 10,008,894 | 5,986,695 | 12,599,100 | 10,753,122 | 10,691,032 | 4,970,047 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 410,500 | 321,900 | 321,900 | - | 2,410,603 | 1,241,216 | 832,819 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,291,517 | 7,547,010 | 4,130,480 | 10,271,913 | 3,236,970 | 4,318,157 | 3,442,770 | 6,855,383 |
| | | 18,841,682 | 19,757,822 | 15,324,644 | 16,258,608 | 19,383,037 | 17,367,445 | 16,021,571 | 11,825,430 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| (i) பல ஆண்டுகளாக நிலவிவரும் 15 சொத்து அலகுகளிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 2,022,159 ஆன நிலுவை குத்தகை வாடகை 2023 ஆண்டிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) சபைக்கு சொந்தமான கடையறைகளிற்காக மீளாய்வாண்டிற்கான பில்லிடல் ரூபா 5,833,972 ஆன போதும் அவற்றில் 44 சதவீதமான ரூபா 2,544,368 தொகையும், நிலுவை கடையறை வாடகையாக அறவிட வேண்டிய ரூபா 1,163,538 தொகையில் 70 சதவீதமான ரூபா 1,131,587 தொகையும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கெபதிகொல்லேவ பேரூந்து தரிப்பிட வியாபார கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான கடையறைகளிற்காக மதிப்பீட்டு திணைக்களத்தினால் வழங்கியுள்ள மதிப்பீட்டு வாடகையிலும் கூடிய வாடகையை அறவிட பொது சபை விஷேட முன்மொழிவின் மூலம் தீர்மானித்துள்ளதால் விண்ணப்பதாரர்கள் இல்லாததன் காரணமாக 23 கடையறைகள் விளைவற்று காணப்படுவதுடன் சபைக்கு ரூபா 1,200,000 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | மதிப்பீட்டு திணைக்கள வாடகை பெறுமதிக்கு குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | கடை வாடகை செலுத்தாத மற்றும் திறக்காத கடையறைகளிற்காக உடன்படிக்கையை இரத்துச் செய்து சட்ட நடவடிக்கை எடுக்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **அனுமதிப்பத்திர கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டில் ரூபா 410,500 ஆன அனுமதிப்பத்திர வருமானத்தை பெற்றுக் கொள்ள மதிப்பிடப்பட்டிருந்த போது நிதி அடிப்படையில் ரூபா 321,900 ஆன வருமானத்தை மாத்திரம் திரட்டி ஆவணப்படுத்தியிருந்ததால் நிலுவை வருமானத்தை இனங்காண இயலாதிருந்தது. | - மேற்படி - | கணிப்பீட்டு அறிக்கைகளிற்கு இணங்க கட்டணத்தை சரியாக அறவிட வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | அறிவித்தல் பலகை கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 2023 ஆண்டிற்காக ரூபா 662,737 ஆன வருமானத்தை அறிவிட பில்லிட்டிருந்த போதும் 98 சதவீதமான ரூபா 649,037 தொகை அறவிட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | யகாவெவ நீர் கருத்திட்ட நீர் பட்டியல்களின் 47 சதவீதமான ரூபா 83,836 தொகை மீயாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நீர் வழங்கல் 54 உடன் கூடிய யகாவெவ நீர் கருத்திட்டத்தின் நீர் பட்டியல் அறவிடல் 2023 ஆண்டு முதல் திருத்தப்பட்டிருந்த போதும் அந்த திருத்தம் பிரகாரம் பட்டியல் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | திருத்திய கட்டணத்தை அறவிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு மாதிரி பரீட்சிப்பின் பிரகாரம் 03 நீர் வழங்கல்களிற்காக மாத்திரம் ரூபா 115,362 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய நீர் வழங்கல் 51 தொடர்பாகவும் நிலுவை கட்டணம் கணக்கிடப்பட்டு அறவிடப்பட வேண்டும். | | |
| (iv) மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,221,920 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 5,964,234 தொகை ஆகும். | - மேற்படி - | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் முக்கிய 30 விடயங்களை மேற்கொள்ள துணைச் சட்டம் விதிக்க இயலுமாகவிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையும் அந்த விடயங்களிற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைதிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பராமரிக்கப்பட்ட 108 கிணறுகள் தொடர்பான சரியான தகவல்கள் சபையிடம் இருக்காததுடன் அவை சபையின் சொத்தாகவும் இனங்காணப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | சரியான விபரங்களை ஆவணப்படுத்தி நாளாதுவரையாக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை பாவித்துக் கொண்டிருக்கும் 19 வாகனங்களை சபையின் பெயரில் பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் கோரிக்கை அல்லது தேவை இல்லாதிருக்கும் போது சபைக்கு வாகனங்களை வழங்குதல் மற்றும் சாரதிகள் இல்லாததால் 04 வாகனங்கள் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - | சபைக்கு உச்ச பயன்பாடு கிடைக்கும் வகையில் வாகனங்களை பயன்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடவடிக்கை திட்டம் பிரகாரம் திட்டமிட்ட 18 உத்தேசங்களை நடைமுறைப்படுத்தி இருக்காததுடன் அந்த கருத்திட்டங்களிற்கான மதிப்பீட்டு பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | வருடாந்த பாதீடுகளிற்கு இணங்கும் வகையில் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |